நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 20/2021

அரசு தரப்புக்காக அ. சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 2 | | | |

1, 3 எதிரிகள் ஆஜரில் இல்லை. மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது. 2, 4 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

10th day of July 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 04.20 )

நான் தற்போது காட்டுமன்னார்கோவில் தாலுக்கா களிக்கடந்தான் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளையும் மற்ற இரண்டு எதிரிகளையும் எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். 5 வருடத்திற்கு முன்பு ஒருநாள் நான் அடிபைப்பில் தண்ணீர் எடுப்பதற்காக போய் இருந்தேன். தண்ணீர் எடுத்து கொண்டு வரும்போது வழுக்கி கீழே விழுந்துவிட்டேன். அதனால் எனக்கு மண்டையில் அடிபட்டு விட்டது. எனக்கு மயக்கமாகி விட்டது. உஷா என்பவர் என்னுடைய ஊரில் பெரிய தெருவைச் சார்ந்தவர். எதிரிகள் மீது என்னை பயன்படுத்தி அம்போக்காக கேஸ் கொடுத்துவிட்டார்கள்.

**நீதிமன்ற கேள்வி** – அம்போக்கு என்றால் என்ன?
**பதில் –** பொய்யாக கேஸ் கொடுத்ததை அம்போக்கு என்று சொல்கிறேன்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி–</u>

என்னை ஆஜர் எதிரிகளும் மற்ற இரண்டு எதிரிகளும் எந்த சமயத்திலும் அசிங்கமாக திட்டவோ அடிக்கவோ செய்யவில்லை. எனக்கு மயக்கமான பிறகு என்னை மருமகனும் சம்மந்தி வீட்டிக்காரரும் கோரிமேடு ஆஸ்பித்திரிக்கு கூட்டிப்போனார்கள். அங்கு டாக்டரிடம் நான் எதுவும் சொல்லவில்லை. டாக்டர் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. நான் 10 நாட்கள் ஆஸ்பித்திரியில் சிகிச்சை பெற்று வந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முழுமையாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சி சட்டப்பிரிவு 154ன் கீழ் அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை–**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரித்தபோது 2020 ஆம் ஆண்டு நடந்துமுடிந்து நெய்வாசல் ஊராட்சி மன்ற தேர்தலில் பாலு என்பவருக்கு ஓட்டு போடாததால் எங்கள் குடும்பத்திற்கும் பாலுவின் சொந்தக்காரர் அமரதீபன் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றும் தேர்தலில் நாங்கள் ஓட்டுபோட்ட ராஜா தோற்றுபோய்விட்டார் என்றும் 28.01.2020 ஆம் தேதி இரவு 08.30 மணிக்கு நானும் எனது மூத்தார் ஆறுமுகம் மகள் உஷா/அ.சா.1 என்பவரும் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தபோது அங்கு வந்த எங்கள் ஊரைச் சேர்ந்த ஆஜர் எதிரிகள் அமரதீபன், அமரதாஸ், முருகானந்தம், வீரமணி ஆகியோர் என் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு தேவிடியா நீங்க ஓட்டு போடலனா எங்க ஆளு ஜெயிக்க மாட்டாரா எங்க ஆளு ஜெயிச்சிட்டாரர். இனி எந்த தேவடியாலும் எங்களை ஒன்றும் பண்ண முடியாது என்று அசிங்கமாக திட்டினார்கள் என்றும் அ.சா.1 வெளியே சென்று ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று சொன்னதற்கு எதிரி அமரதீபன் உஷாவை தலை முடியை பிடித்து இழுத்து இடது தோள்பட்டையில் கடித்ததாகவும் அமரதாஸ் உஷாவை பிடித்து கீழே தள்ளி வயிற்றில் எட்டி உதைத்தாகவும் முருகானந்தமும் வீரமணியும் கட்டை கழியை எடுத்து தோள்பட்டையிலும் முதுகிலும் அடித்தார்கள் என்றும் நான் சண்டையை தடுத்தபோது அமரதீபன் அவர் இடுப்பில் வைத்திருந்த கத்தியால் ஒழிந்து போ என்ற கூறி எனது இடது பக்க தலையிலும் காதிலும் மாறி மாறி வெட்டியதால் எனது மண்டை பிளந்து ரத்தம் கொட்டியது என்றும் அமரதாஸ் என்னை கையால் கன்னத்தில் அடித்ததாகவும் முருகானந்தமும் வீரமணியும் கட்டை கழியால் என்னை மாறி மாறி அடித்தார்கள் என்றும்

நான் மயக்கம்போட்டு கீழே விழுந்துவிட்டு கண்விழித்து பார்த்தபோது பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்ததாகவும் அங்கு எனது தலையில் அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றும் கொரோனா வைரஸ்நோய்தொற்று காரணமாக காட்டுமன்னார்கோவில் ஜி.எச் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்ற சமயத்தில் எனது மருமகள் அ.சா.1 எதிரிகள் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து 01.06.2020 தேதியில் காட்டுமன்னார்கோவில் காவல்ஆய்வாளர் என்னை விசாரித்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் நான் கீழே விழுந்து எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 04.40)

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.